1987 மார்ச் 23]

(PAPER INSCRIPTIONS) பெற்று அவைகளை அச்சாக்கி நூலாக வெளியிட, பல ஆண்டுகளுக்கு முன் அரசு நடவடிக்கை எடுத்து, இது சம்பந்தமாகப் பல ஆண்டுகள் தொடர்ந்து மத்திய அரசினுடைய கல்வெட்டுப் பிரிவைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கல்வெட்டுப் படிகளைப் படித்து, நூலாக வெளியிடத் தவணை முறையில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கிராமப்புற மனமகிழ் மன்றங்கள்

135—(* வினா எண் 7937) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் பல இடங்களில் 'மனமகிழ் மன்றம்' என்ற பெயரால் சூதாட்டக்கூடமாக நடைபெற்று வருவதைக் கருத்திற்கொண்டு அவைகளுக்கான அனுமதியினை ரத்து செய்திடும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-40)

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே மனமகிழ் மன்றம் துவக்குவதனுடைய நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் யார் துவக்க விரும்புகிறார்களோ அவர்களே அந்த விதிகளைச் சொல்ல வேண்டும். முக்கியமாக மனமகிழ்ச்சி, கல்வி, போன்றவற்றின் அபிவிருத்திக்காக இந்த மனமகிழ் மன்றங்கள் தோற்றுவிக்கப் படுகின்றன.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் என்கின்ற பெயராலே பல இடங்களிலே சூதாட்டங்கள் பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்றன, சட்டத்தை ஏமாற்றி. எனவே, அதைக் கருத்திற்

கொண்டு அதற்கென்று தனியாக அதிகாரிகளை நியமித்து அதன் மூலமாக அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, தமிழ்நாடு பூராவும் எத்தனை மனமகிழ் மன்றங்கள் இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் என்ற பெயரில் சூதாட்டம் நடக்குமானால் அந்தத் தகவலைக் கொடுத்தால் போலீசார் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது சம்பந்தப்பட்ட சப்-ரிஜிஸ்திரார் செக்ஷன் 38, உட்பிரிவு 2-இன்கீழ் அந்த உரிமத்தை ரத்து செய்யலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மகிழ்ச்சியோடு கேட்கலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : கேள்வி 134-இல் ஒரு துணை வினா. தமிழ்நாட்டினுடைய வரலாற்றுக்கு மிக்க தேவைப்பட்ட . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அது அல்ல இது அடுத்த கேள்வி.

நெல்லிக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் அமைத்தல்

136—(* வினா எண் 8793) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் கருத்துரு அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் பகுதி நிறைந்த விவசாயப் பெருமக்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். அங்கே